# *புனித ஜோசப் கொத்தலங்கோ (1786-1842)*

இவர் குருப்பட்டம் பெற்றார். சாகக்கிடந்த ஒரு பெண்ணுக்கு இறுதி திரு அருட்சாதனங்களை வழங்கும்படி ஒருநாள் இவரை அழைத்தார்கள். அந்த பெண்ணுக்கோ இருக்க வீடு கிடையாது. வீடு இல்லாதவர்களுக்கென்று ஓர் இல்லத்தைத் தொடங்கும்படி அவர் தீர்மானித்து சில அறைகளை வாடகைக்கு அமர்த்தினார். பக்தியுள்ள பெண் ஒருத்தி சில படுக்கைகளைக் கொடுத்தாள். ஒரு மருத்துவரும், மருந்து தயாரிக்கும் ஒருவரும் இலவசமாக சேவை செய்ய முன் வந்தனர். நாளடைவில் இன்னும் பல அறைகள் சேர்க்கப்பட்டது.

நோயாளிகளுக்கு சேவை செய்ய தாதிப் பெண்களும் அமர்த்தப்பட்டனர். ‘தேவ பராமரிக்கையின் சிறிய இல்லம்’ என்னும் நிறுவனம் தூரின் நகரிலே இவரால் தொடங்கப்பட்டது. நாளடைவில் அது பெரிதாக வளர்ந்தது. ‘புதுமை வீடு’ என இந்த இல்லத்தை புனித பத்தாம் பத்திநாதர் பாப்பு அழைத்தார். ஒன்பதினாயிரம் மக்கள் இதில் வசித்தார்கள் நொண்டி, சப்பாணிகள், அகதிகள், மனந்திரும்பிய பெண்கள் பலவித நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் ஆகியோர் அங்கிருந்தனர். அங்கிருந்தவர்களை பராமரிக்க 14 கன்னியர் சபைகள் தொடங்கப்பட்டன. எவ்வித நிரந்தர வருவாயும் இன்றி 100 ஆண்டுகளாக இந்த நிறுவனம் நடைபெறுகிறது. பணமும், உணவும், உடைகளும் மக்களிடமிருந்து வருகின்றன. இந்த நிறுவனமானது தேவ பராமரிக்கையின் மீது நம் புனிதர் வைத்துள்ள எல்லையற்ற நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாகும். நிறுவனத்தை நடத்த நம் புனிதர் தம் உடமைகளையும் விற்பார். ஒருமுறை இவருக்கு பெரும் கடன் ஒன்று ஏற்பட்டது. தம்மிடமிருந்த சில நாணயங்களை ஜன்னல் வழியாக வெளியே வீசி “வெறும் கையுடன் போய் நாம் கடவுளிடம் உதவி கேட்க வேண்டும்” என்று கூறினார். அவர் கற்களும், சுண்ணாம்பும் சுமப்பார். கடைகளிலும் களஞ்சியங்களிலும் வேலை செய்வார். புத்தி சுவாதீனமற்ற சிறுவர் சிறுமிகளோடு அன்புடன் உரையாடுவார்.

**சிந்தனை:**

கடவுள் நம்மை இத்தனை ஆண்டுகளாக காத்து வந்திருக்கிறார். இறுதிவரை காப்பார் என்னும் நம்பிக்கை நம்மிடம் இருக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, உம்மீது அசையாத நம்பிக்கையை எங்கள் அனைவருக்கு தாரும்.